# தமிழர் எண் கணித முறையுடன் வள்ளுவரின் கணிதம் சார்ந்த சிந்தனை

# Valluvar's Mathematical Thinking with Tamil Numerology

**விஜயராகவன். க,** தமிழ்த்துறை, சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-5, தமிழ்நாடு, இந்தியா.

**Vijayaragavan G,** Department of Tamil, SONA College of Arts and Science, Salem-5, Tamil Nadu, India.

ORCiD : https://orcid.org/0009-0002-9262-2204

**DOI: 10.5281/zenodo.17417958**

## Abstract

Valluvam is a book on life. Valluvar taught life to the society. Innumerable literatures on life may have appeared in the Tamil language. Innumerable ideas on human life may have been given by poets, writers, and essayists. However, Valluvar has given a book that is suitable for all times and people of all times. The list of philosophy, linguistics, science, spiritual thought, basic principles of genetics, politics, etc., is a long one, explaining the actions of the entire human race. In today's context, it is necessary to identify them. This study takes the form of a research paper that provides the Tamil world with knowledge about the numerical principles that are linked to the letters of those elements.

## ஆய்வுச்சுருக்கம்

வள்ளுவம் வாழ்வியலுக்கான நூல். வள்ளுவர் வாழ்வியலை சமுதாயத்திற்கு கற்றுத் தந்தவர். எண்ணற்ற வாழ்வியலுக்கான இலக்கியங்கள் தமிழ்மொழியில் தோன்றி இருக்கலாம். மானுட வாழ்வியலுக்கான எண்ணற்ற கருத்துக்களை புலவர்களும், கவிஞர்களும், உரையாசிரியர்களும் தந்திருக்கலாம். எனினும் எக்காலத்திற்கும் எக்காலத்தவர்கும் பொருந்தி நிற்கும் வகையில் ஒரு நூலை தந்திருக்கிறார் வள்ளுவர். மெய்யியல், மொழியியல், அறிவியல், ஆன்மீக சிந்தனை, பிறப்பியல் சார்ந்த அடிப்படை நிலை, அரசியல் என நீளும் பட்டியல் ஒட்டுமொத்த மனித குலத்தின் செயல் விளக்கமாய் விரிந்து நிற்கிறது. இன்றைய சூழலில் அவற்றை அடையாளம் காண வேண்டியதும் அவசியமாகிறது. அந்த கூறுகளில் எழுத்தியளுடன் பிணைந்திருக்கும் எண்ணியலைப் பற்றி தமிழ்சார் உலகு அறியும் வண்ணம் ஆய்ந்து ஆய்வுலகிற்கு அளிக்கும் ஒரு ஆய்வுக்கட்டுரையாக வடிவம் பெறுகிறது இந்த ஆய்வு.

**Keywords :** Life, Science, Arithmetic, Statistics, Writing, Numerology, Numerals,

வாழ்வியல், அறிவியல், எண்கணிதம், எண் குறியீடு, எழுத்து, எண்ணியல், எண்ணுபெயர்கள்

**முன்னுரை**

அறிவியல் என்பது ஒரு துறை. வாழ்வியல் இயக்கத்திற்குத் துணை நிற்பது. ‘அறிவியல்’ என்னும் சொல் பழந்தமிழ் நூல்களில் இல்லை. இந்த நூற்றாண்டில் உருவான சொல் அறிவியல். ஆங்கிலத்தின் 'Science' என்பதற்கு ஆக்கப்பெற்ற சொல். விஞ்ஞானம் என்பது வடசொல். தமிழில் 'அறிவியல்' என்னும் சொல் முற்கால நூல்களில் இல்லாமையால் அறிவியற் கருத்துக்கள் தமிழில் இல்லை என்று ஆகாது. தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் பல அறிவியற் கருத்துக்களைக் காண முடிகின்றது. திருவள்ளுவத்தில் அறிவியற் கருத்துக்கள் செறிந்துள்ளன. அறிவியல், கணக்கியல், மருத்துவம், இயற்பியல், தாவரவியல், விலங்கியல், வேளாண்மை, மேலாண்மை அறிவியல், பொதுவானவை என பல்வேறு அறிவியல் கூறுகள் உள்ளடங்கிய நூலைப் படைத்துள்ளார்.

எண் கணித அறிவியல் சிந்தனை

பழங்காலம் தொட்டே அறிவியலில் தெளிவு பெற்று விளங்கினர் நம் முன்னோர். அறிவியல் என்பது பல்வேறு கூர்களை உள்ளடக்கியது. அதில் கணிதமும் ஒன்று. காலத்தை, நேரத்தை என கணிக்கத் தொடங்கிய அவர்களது எண்ணியல் சார்ந்த அறிவு தற்காலத்தில் தோன்றும் அறிவியலுக்கான விதையாக இருந்துள்ளது. அயல்நாடுகளில் எண்ணியல் சார்ந்த கல்வியல் முறை நடைமுறையில் உள்ளது.

**‘எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்’**

எனும் ஔவையின் வரிகள் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. இளம் பருவத்திலேயே எழுத்தியல் திறனும், கணித அறிவும் நன்கு கைவரப் பெறுதல் வாழ்வியலுக்கான தலையாய அடிப்படைகள் ஆகும். ஏந்த பொருளையும் விரைவாகவும் துல்லியமாகவும் அறிந்து கொள்ள இவ்விரு ஆற்றல்களும் கை கொடுக்கும். எனவே இளமைப் பருவத்திலிருந்தே எழுத்தியல் திறனையும், கணித அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்த கல்வியறிவு அவசியமானது. கணிதவியல் அடிப்படையில் தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் ஆராய்வதற்கு மிகுந்த இடம் உள்ளது. எழுத்துக்களால் அறியப்பெறுவது இலக்கியம் எனில், எண்களால் அறியப்பெறுவது கணிதம் ஆகும்.

**கோட்டுக் கணக்கு முறை**

எண்ணுப்பெயர்கள் பற்றிக் குறிப்பிடும் தொல்காப்பியர் எண் குறியீடுகள் பற்றிக் குறிப்பிடவில்லை. 30 எழுத்துக்களால் உணர்த்தப்படும் தமிழ்மொழியைப் பற்றித்

தொல்காப்பியம் பேசுகிறது. எண் குறியீடு இந்த 30 எழுத்துக்களுக்கு அப்பாற்பட்டது.

**“வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற**

**நாளொற்றித் தேய்ந்த விரல்” குறள். 1261**

கணவன் பொருள்தேடிவரச் செல்கிறான். மனைவி அவன் சென்று எத்தனை நாள் ஆயிற்று என அறிய ஒவ்வொரு நாளும் விடிந்தெழுந்தவுடன் சுவரில் தனித்தனிக் கோடுபோட்டு வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோட்டையும் விரலால் தொட்டு எண்ணிப்பார்க்கிறாள். என திருக்குறள் ஒன்று கணக்கியலை குறித்துக் காட்டுகிறது. மதுரைக் கணக்காயனார் போன்ற புலவர்களும், மதுரை வேளாசான், முக்கால் ஆசான் நல்வெள்ளையார், மதுரை ஆசிரியர் கோடங்கொற்றனார், மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார், மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார், மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார், மதுரை இளம்பாலாசிரியன் சேந்தன் கூத்தனார் என ‘ஆசிரியர்’ எனச் சிறப்பிக்கப்பட்டுள்ள புலவர்களும் எண்-கணக்கைக் கற்பித்துவந்த சங்ககாலப் புலவர்கள்.

**பண்டைய எண் குறியீடு முறை**

தமிழரின் எண் குறியீடு எப்படி இருந்தது என்பதைக் காட்டும் செய்தி 13-ஆம் நூற்றாண்டு ஒட்டக்கூத்தன், புகழேந்தி ஆகிய புலவர் காலத்து ஔவையார் பாடலில் உள்ளது.

**“எட்டேகால் லட்சணமே, எமனேறும் பரியே**

**மட்டில் பெரியம்மை வாகனமே முட்டமேற்**

**கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே**

**ஆரையடா சொன்னாயடா” - ஔவை. தனி. 11**

அவர் ‘அவலட்சணமே’ என்னும் சொல்லால் ஒருவனைத் திட்டும்போது ‘எட்டேகால் லட்சணமே’ என்று திட்டுகிறார். தமிழில் ‘அ’ என்பது எண் 8-ஐக் குறிக்கும் ‘வ’ என்பது 1/4-ஐக் குறிக்கும். 8, 1/4 இரண்டையும் சேர்த்தால் ‘அவ’ என வரும். எனவே எட்டேகால் லட்சணம் என்பது அவலட்சணம் என்னும் பொருளை உணர்த்தும். ஒன்று என்னும் முழுமையைப் பின்னோக்கிப் பகுக்கும்போது தமிழர்கள் இரண்டு வகையான பாகுபாடுகளைக் கடைப்பிடித்துள்ளனர்.

பண்டைதமிழர் கணக்கில் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தனர். எண்ணிலி (infinity)-யை குறிக்க ‘கந்தழி’ என்ற சொல்லையும், ஆயிரம் கோடியை குறிக்க ‘கும்பம்’ என்ற சொல்லையும் பயன்படுத்தினர்.

மிக நுண்ணிய அளவைகளைக் கையாண்ட பண்டைய தமிழர்கள்

எண்ணிலளவைக்கும், நீட்டளவைக்கும் கீழ்வாய் சிற்றிலக்க வாய்பாடுகள் தயாரித்ததை தேவநேயன் அவர்களின் பண்டை தமிழக நாகரீகமும் பண்பாடும் என்ற நூலில் விவரித்துள்ளார். அவற்றிலிருந்து ஒரு மேல் முந்திரி = 1/320 எனவும் கீழ் முந்திரி =1/102400 எனவும் அறிகின்றோம். ஒரு 'தேர்த்துகள்' என்பது மிகமிகச் சிறிய எண் எனவும் அறிகின்றோம். நீட்டலளவை வாய்பாடு அணுவிலிருந்து தொடங்கி ஒரு காதம் வரை வெவ்வேறு பெயரகளால் வழங்கப் பெற்றது. இதனால் அந்த காலத்து அரசுகள் நிலத்தை துல்லியமாக அளந்து அதற்கேற்றாற் போல் வரி வசூலித்தனர்.

மேல் வாயிலக்கப் பேரெண்களை குறிக்க தொல்காப்பியர் ஒரு சூத்திரமே அளித்துள்ளார். அம்பல் என வரூஉம் இறுதி அல் பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும் எனப் பல கோடிகளை குறிக்கும் பேரெண்களை குறிப்பால் உணர்த்துகிறார். தாமரை, குவளை, என்பன 'ஐ' ஈறும் 'சொல்லின் கடைசியில்', கணிகம், சங்கம், வெள்ளம் என்பன.'அம்' ஈறும் ஆம்பல் என்பது பல் ஈறும், நெய்தல் என்பது 'அல்' ஈறும் உடைய சொற்கள்.

- கும்பம் - ஆயிரம் கோடி 1000,0000000
- கணிகம் - பத்தாயிரம் கோடி (11 சுழியம்)
- தாமரை - கோடாகோடி (14 சுழியம்)
- சங்கம் - பத்து கோடாகோடி
- வாரணம் - நூறு கோடாகோடி
- பரதம் - இலட்சம் கோடாகோடி (1பின் 24சுழியங்களை கொண்டது.)

பரிபாடலில் கீரந்தையார்,

**"நெய்தலும் குவளையும் ஆம்பலும் சங்கமும்**
**மையில் கமலமும் வெள்ளமும்"**

என வெளிப்படையாக பேரெண்களை குறிக்கிறார். இலக்கம் லட்சம் என்ற எண். நூறாயிரம் என்ற சொல்லால் குறிக்கப்பட்டு வந்தது. மேலும், சிற்றிலக்கத்திற்கு பேரிலக்கத்திற்கும் பெருக்கல் வாய்பாடு இருந்தது. சதுர வாய்பாடும் இருந்தது. பண்டை கால தமிழகத்தில் குழிக்கணக்கு என இதை குறிப்பிட்டு வந்தனர். குழித்தல் என்றால் சதுரித்தல் என்று பெயர். ஒரு எண்ணை அவ்வெண்ணை கொண்டே பெருக்குதல் 'சதுரித்தல்' எனப்படும்.

சிற்றிலக்கக் குழிப்பைச் சிறுகுழி எனவும் பேரிலக்க குழிப்பை பெருங்குழியெனவும் தனித்தனியே குறித்தும் வந்திருக்கின்றனர். காக்கைப் பாடினியார் என்ற பெண்பால் புலவர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தவர்

**"வட்டத்தரை கொண்டு விட்டத்தரை தாக்கின்**

**சட்டென தெரியும் குழி"**

என்ற பாடல் மூலம் எளிதாக கூறி விடுகிறார். அதாவது சுற்றளவில் பாதியும் வட்டத்து அரை வட்டத்தின் பாதியும் ஆரம் பெருக்க பரப்பு குழி கிடைக்கும். தனிப்பாடல்கள் சிலவும் கணித சொற்களை உள்ளடக்கி இருந்துள்ளது என்று அறிகின்றோம். காஞ்சியில் வரதராஜர் யானை வாகனத்தில் வீற்றிருந்து உலா வருகிறார் அவ்வழகை கண்டு மயங்கிய ஒரு நங்கையின் அரையாடை நழுவி கீழே விழுந்ததாம். என காளமேகப் புலவர் பாடுகிறார்.

**"எட்டொருமா வெண்காணிமீதே இருந்த கலைப்**

**பட்டொருமா நான்மாவிற் பாய்ததே சிட்டர் தொழும்**

**தேவாதி தேவன் திருவத்தியூர் வரதன்**

**மாவேறி வீதிவர கண்டு"**

இப்பாடலில் ஒரு மா, காணி, எட்டு மா, எண் காணி, நான்மா என்ற கணிதச் சொற்களை திறம்பட கையாண்ட நயம் பாராட்டதக்கது.

### பகுப்புப் பெயர்கள்

ஒன்றிற்குப் பின்னே உள்ள எண்களைப் பின்னம் என்கிறோம். பின்னே உள்ளது பின்னம். தொல்காப்பியர் அரை, கால் முதலான பின்ன எண்கள் ஒன்றரை என்பது போல் முழுஎண்ணோடு புணர்வதையும், காலே அரைக்கால் என்பது போல் பின்னத்தோடு பின்னம் புணர்வதையும் குறிப்பிடுகிறார்.

ஒன்று என்னும் முழுமையை இரண்டு இரண்டாகப் பகுத்துக்கொண்டு செல்லும் முறை. இதை பழந்தமிழர் கணக்கீட்டு முறையாக அறிகிறோம்.

- அரை –1/2
- கால் – 1/4
- அரைக்கால் – 1/8
- வீசம் (அல்லது) மாகாணி – 1/16
- அரைவீசம் – 1/32
- கால்வீசம் – 1/64
- அரைக்கால்வீசம் – 1/128

எனப் பின்னத்தின் பெயரும் குறியீடும் அமையும். ஒன்று என்னும் முழுமையை முதலில்

ஐந்தாகப் பகுத்து அதன் பின்னத்தை இரண்டிரண்டாகப் பகுத்துக்கொண்டு சொல்லும் முறைமையையும் பின்பர்ரியுல்லத்தை காண முடிகிறது.

- நான்மா - 1/5
- இருமா - 1/10
- ஒருமா – 1/20
- அரைமா – 1/40
- காணி – 1/80
- அரைக்காணி – 1/160
- முந்திரி – 1/320

எனப் பின்னத்தின் பெயர்கள் அமையும்.

எண்ணும் எழுத்தும்

**"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்என்ப வாழும் உயிர்க்கு"** **- குறள். 392**

எண் என்று சொல்லப்படுவன எடுத்து என்று சொல்லப்படுவன ஆகிய இருவகைக் கலைகளையும் வாழும் மக்களுக்குக் கண்கள் என்று கூறுவர் அறிஞர். அந்த வகையில் திருக்குறளில் ஆங்காங்கே எண்ணியல் கணித சார்ந்த அறிவியல் சிந்தனைகளை அவர் வெளிப்படுத்தியுள்ளார். ஒன்று (29 இடங்களில்), இரண்டு (16 இடங்களில்), மூன்று (10 இடங்களில்), நான்கு (09 இடங்களில்), ஐந்து (11 இடங்களில்), ஆறு (01 இடங்களில்), ஏழு (08 இடங்களில்), எட்டு (01 இடங்களில்), பத்து (01 இடங்களில்), நூறு (01 இடங்களில்), ஆயிரம் (01 இடங்களில்), கோடி (08 இடங்களில்) எனும் எண்ணுபெயர்களை வள்ளுவர் தனது நூலில் சுட்டியிருக்கின்றார்.

**வள்ளுவரின் எண்ணியல் அறிவும் பயன்பாட்டு முறையும்**

- ஒன்று - 109, 156, 259, 397, 398, 400, 454, 609, 661, 773, 835, 836, 838, 871, 875, 932, 974, 1023, 1026, 1052, 1095, II46, 1196, 1197, 1202, 1266, 1269, 1274, 1275
- இரண்டு - 19, 392, 393, 402, 455, 581, 662, 674, 760, 875, 920, 992, 1022, 1108, 1196, 1247.
- மூன்று - 41, 360, 383, 589, 682, 684, 688, 941, 952, 1085

- நான்கு - 35, 382, 501, 513, 605, 743, 766, 950, 953
- ஐந்து - 24, 27, 43, 271, 343, 632, 675, 738, 939, 983, 1101
- ஆறு - 381
- ஏழு - 62, 107, 126, 398, 538, 835, 1269, 1278
- எட்டு - 09
- ஒன்பது - இந்த எண் முறையை வள்ளுவர் குரலில் எங்கும் சுட்டவில்லை.
- பத்து - 450
- நூறு - 932
- ஆயிரம் - 259
- கோடி - 337, 377, 639, 816, 817, 954, 1005, 1061

**ஒன்று எனும் எண்ணுப்பெயர்**

எண்களின் வரிசையில் முதலில் வருவது ஒன்று. வள்ளுவர் ஒன்று என்ற எண்ணைப் இருபத்தி எட்டு குறட்பாக்களில் கையாண்டு கருத்துக்களைப் புலப்படுத்தியுள்ளார். அவற்றுள் இன்றியதையாத ஒரிரு இடங்களை இங்கே சுட்டிக் காட்டலாம்.

**“கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த**
**ஒன்றுநன்று உள்ளக் கெடும்”** - குறள். 109

என்பது ‘செய்ந்நன்றி அறிதல்’ என்ற அதிகாரத்தில் வரும் ஒரு குறட்பா. இதில் ஒன்று என்ற எண்ணைச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார். மேளம் சில குறட்பாக்களில்,

**“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை.** - குறள். 400
**“குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்**
**மடியாண்மை மாற்றக் கெடும்.** - குறள். 609
**“ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்**
**தான்புக் கழுந்தும் அளறு.** - குறள். 835
**“கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்**
**திங்களைப் பாம்புகொண் டற்று”** - குறள். 1146

போன்ற குறள்களில் வள்ளுவர் ஒன்று எனும் என்னுபெயரை ஒரு, ஓர், ஒருவற்கு, ஒருமை, ஒன்றென் எனும் சொற்களால் குறித்து எண்ணை வள்ளுவர் திறம்படக்

கையாண்டுள்ளார்.

**தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்**

**வானம் வழங்கா தெனின். - குறள். 19**

**இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்**

**நல்லாற்றின் நின்ற துணை. - குறள். 41**

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**

**இழுக்கா இயன்றது அறம். - குறள். 35**

**உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்**

**வரனென்னும் வைப்பிற்கோர் வித்தது. - குறள். 24**

**படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்**

**உடையான் அரசருள் ஏறு. - குறள். 381**

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**

**பண்புடை மக்கட் பெறின். - குறள். 62**

**கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்**

**தாளை வணங்காத் தலை. - குறள். 09**

இவ்வாறு குறளில் வள்ளுவர் ஒன்று முதல் எட்டு வரையிலான எண்ணுபெயர்களை ஆங்காங்கே பதிவு செய்துள்ளார். இது அவரது எண்ணியல் சார்ந்த கணிதத் திறனை உலகிற்கு உணர்த்துவதை அறிய முடிகிறது. மேலும், இதேபோன்று பத்து, நூறு, ஆயிரம், கோடி எனும் எண்ணுபெயர்களை தனது நூலில் திறம்பட பயன்படுத்தியிருக்கின்றார், அவை பின்வருமாறு அறியப்படுகிறது.

**பத்து எனும் எண்ணுப்பெயர்**

**“வல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே**

**நல்லார் தொடர்கை விடல்” - குறள். 450**

திருவள்ளுவர் சான்றோர்க்குத் தரும் மதிப்பு பெரியது. நல்லார், தக்கார், இடிக்கும் துணையார், அறன் அறிந்து மூத்த அறிவுடையார் என்றெல்லாம் பொருள் பொதிந்த தொடர்களால் அவர்களுக்கு மதிப்பளித்து சுட்டுகிறார். வள்ளுவரின் கருத்தில் நல்லவராகிய பெரியாரின் தொடர்பைக் கைவிடுதல் என்பது பலருடையத தேடிக் கொள்வதை விடப் பத்து மடங்கு தீமை பயப்பதாகும்.

**நூறு எனும் எண்ணுப்பெயர்**

**“ஒன்றுஎய்தி நூறுஇழக்கும் சூதர்க்கும் உண்டாம்கொல்**

நன்றுஎய்தி வாழ்ந்தோர் ஆறு" - குறள்.932

நூறு என்னும் எண்களைத் தொடர்புபடுத்தித் தம் கருத்தினைத் திறம்பட எடுத்துரைத்துள்ளார் வள்ளுவர். திருவள்ளுவர் இக்குறட்பாவில் சூதாட்டத்தில் பெறும் பொருள் ஒரு மடங்கு இருக்கும் ஆனால் சூதாடிகள் ஆட்டத்தின் முடிவில் இழப்பதோ நூறு மடங்காக அமையும் என வாழ்வியலுக்கு ஒவ்வாத நிலையை தெளிவுபட கூறுகிறார்.

**ஆயிரம் எனும் எண்ணுப்பெயர்**

**"அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுத்து உண்ணாமை நன்று"** - குறள். 259

புலால் மறுத்தல் – மற்றோர் உயிரின் உடம்பை உண்ணாமை – வள்ளுவர் உயிரெனப் போற்றும் கொள்கைகளுள் ஒன்று. அதன் இன்றியமையாமையைப் புலப்படுத்தும் இடத்தில் அவர் ஆயிரம் என்ற எண்ணைத் திறம்படப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். அவரது கருத்தில் 'நெய் முதலிய உணவுப் பொருள்களைத் தீயில் சொரிந்து ஆயிரம் வேள்விகள் செய்தலை விட ஒரு விலங்கின் உயிரைக் கொன்று அதன் உடம்பைத் தின்னாதிருத்தல் நல்லது ஆகும்.'

**கோடி எனும் எண்ணுப்பெயர்**

திருவள்ளுவருக்குக் கோடி என்ற பேரெண் மீது ஒரு தனி ஈர்ப்பு உள்ளது. அவர் அதனை எட்டுக் குறள்களில் கையாண்டுள்ளார். ஒரு கோடியை மட்டுமின்றி பத்து கோடி, எழுபது கோடி என்று அதன் விவரிக்க எண்களையும் அவர் இரண்டு குறட்பாக்களில் பயன்படுத்தியுள்ளார்.

**"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி**
**தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது"** - குறள். 377
**"நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்**
**பத்துஅடுத்த கோடி உறும்"** - குறள். 817

போன்ற குறட்பாக்களில் கோடி என்ற எண்ணின் பயன்பாட்டு உத்தியை காணலாம். வாழ்வில் தீ நட்பால் விளையும் தாக்கத்தைப் புலப்படுத்தக் கருதும் வள்ளுவர் அகத்தில் அன்பு இல்லாமல் புறத்தில் நகைக்கும் தன்மை உடையவரின் நட்பை விட பகைவரால் வருவன பத்துக்கோடி மடங்கு நன்மை ஆகும் என்கிறார். இவ்வாறு திருவள்ளுவர் எண்களைப் பயன்படுத்தித் தம் கருத்துக்களை புலப்படுத்தியுள்ளார்.

**துணைநூற்பட்டியல்**

1. இளம்பூரணனார் உரை, தொல்காப்பியம் (எழுத்து - சொல் – பொருள்), கௌரா

பதிப்பகக் குழுமம், 2017

2. புலியூர் கேசிகன், தொல்காப்பியம், தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை, 2014
3. விருச்சிகன் ரவீந்திரநாத், தமிழ் ஒளியில் எண் கணிதம், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், 2010
4. திருக்குறள் பரிமேலழகர் உரை, கங்கை புத்தக நிலையம், 2005
5. இளங்குமரன் இரா., திருக்குறளில் அறிவியல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2009
6. முனைவர் குமரிச்செழியன், திருக்குறளில் அறிவியல் கருத்துகள், கௌரா பதிப்பகம், 2016

Referances

1. Ilampoorananar's text, Tolkappiyam (Word - Word - Meaning), Kaura Publishing Group, 2017
2. Puliyur Keshikan, Tolkappiyam, Tamil Development Department, Chennai, 2014
3. Viruchikan Rabindranath, Numerology in Tamil Light, Sri Senpaka Publishing House, 2010
4. Thirukkural Parimelazhagar's text, Gangai Bookstore, 2005
5. Ilangumaran I.R., Science in Thirukkural, Meenakshi Bookstore, Madurai, 2009
6. Dr. Kumarichezhiyan, Scientific Concepts in Thirukkural, Kaura Publishing House, 2016

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**விஜயராகவன். க, "தமிழர் எண் கணித முறையுடன் வள்ளுவரின் கணிதம் சார்ந்த சிந்தனை"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 5, இதழ் 4, அக்டோபர் 2025, பக். 18-27

**Cite this Article in English**

**Vijayaragavan G, "Valluvar's Mathematical Thinking with Tamil Numerology"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.5 Issue 4, October 2025, pp. 18-27